தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (9.9.2024) அமெரிக்க நாட்டின் சிகாகோவில், ஜாபில் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 2000 கோடி ரூபாய் முதலீட்டில் 5000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் திருச்சிராப்பள்ளியில் மின்னணு உற்பத்தி நிறுவனம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே. விஷ்ணு, ஜாபில் நிறுவனத்தின் செயல் துணைத் தலைவர் மேட் கிரவுலி, முதுநிலை இயக்குநர் நித்து சின்கா மற்றும் பி.ஜெ. ஃபேரன்காப் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (9.9.2024) அமெரிக்க நாட்டின் சிகாகோவில், ஆட்டோடெஸ்க் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே தமிழ்நாட்டு இளைஞர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காகவும், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) மற்றும் ஸ்டார்ட்அப்கள் உள்ளிட்ட தொழில்துறை சுற்றுச்சூழல் அமைப்புகளில் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே. விஷ்ணு, ஆட்டோடெஸ்க் நிறுவனத்தின் செயல் துணைத் தலைவர் ஜெப் கிண்டர், துணைத் தலைவர் கென் ஃபூ மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

திருச்சி - காஞ்சிக்கு 2,666 கோடி ரூபாய் புதிய முதலீடுகள்!

முதல் பக்கத் தொடர்ச்சி

உற்பத்தி நிறுவனங்களை கொண்டுள்ளது. ஜாபில் நிறுவனம் பார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும்.

ஜாபில் நிறுவனத்துடன் புரிந்துணர்வு

முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் ஜாபில் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 2000 கோடி ரூபாய் முதலீட்டில் 5000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் திருச்சிராப்பள்ளியில் மின்னணு உற்பத்தி நிறுவனம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில் ஜாபில் நிறுவனத்தின் செயல் துணைத் தலைவர் மேட் கிரவுலி, முதுநிலை இயக்குநர் நித்து சின்கா மற்றும் பி.ஜெ. ஃபேரன்காப் ஆகியோர் பங்கேற்றனர்.

ராக்வெல் ஆட்டோமேஷன் நிறுவனம் (Rockwell Automation)

ராக்வெல் ஆட்டோமேஷன் நிறுவனமானது, தொழிற்துறை ஆட்டோமேஷன் மற்றும் டிஜிட்டல் மாற்றத்திற்கான (Industrial Automation and Digital transformation) உலகின் மிகப்பெரிய நிறுவனங்களில் ஒன்றாகும். இந்நிறுவனத்தின் கார்ப்பரேட் தலைமையகம் அமெரிக்க நாட்டின் விஸ்கான்சின்னிலுள்ள மில்வாக்கியில் அமைந்துள்ளது. இந்நிறுவனம் பார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும்.

ராக்வெல் ஆட்டோமேஷன் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது

முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் ராக்வெல் ஆட்டோமேஷன் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 666 கோடி ரூபாய் முதலீட்டில் காஞ்சிபுரத்தில் மின்னணு உற்பத்தி நிறுவன விரிவாக்கத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில், ராக்வெல் ஆட்டோமேஷன் நிறுவனத்தின் தலைவர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் பிளேக் மோரெட், முதுநிலை துணைத் தலைவர் ராபர்ட் பட்டர்மோர், துணைத் தலைவர் எட்வர்ட் மோர்லான்டு, இயக்குநர் முத்துகுமரன் பிச்சை ஆகியோர் பங்கேற்றனர்.

ஆட்டோடெஸ்க் நிறுவனம் (Autodesk)

ஆட்டோடெஸ்க் நிறுவனமானது ஒரு அமெரிக்க பன்னாட்டு நிறுவனமாகும். இந்நிறுவனம் கட்டடக்கலை, பொறியியல், கட்டுமானம், உற்பத்தி, ஊடகம், கல்வி மற்றும் பொழுதுபோக்குத் தொழில்களுக்கான மென்பொருள் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்கி வருகிறது. ஆட்டோடெஸ்க் நிறுவனத்தில் உலகளவில் 14,000 ஊழியர்கள் பணி புரிந்து வருகின்றனர். இது ஒரு பார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும்.

ஆட்டோடெஸ்க் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது

முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் ஆட்டோடெஸ்க் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே தமிழ்நாட்டு இளைஞர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காகவும், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) மற்றும் ஸ்டார்ட்அப்கள் உள்ளிட்ட தொழில்துறை சுற்றுச்சூழல் அமைப்புகளில் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில் ஆட்டோடெஸ்க் நிறுவனத்தின் செயல் துணைத் தலைவர் ஜெப் கிண்டர், துணைத் தலைவர் கென் ஃபூ ஆகியோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே. விஷ்ணு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

புதிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு அரசு ஒருபோதும் ஏற்காது !

கல்வியில் அரசியல் செய்வது ஒன்றிய அரசுதான் !

கொடைக்கானலில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேட்டி!

கொடைக்கானல், செப்.11-

பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கொடைக்கானலில் நடைபெற்று வரும் கலைஞர் ஆர்மி பயிற்சி பட்டறையில் கலந்து கொண்டார்.

அப்போது செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர், ஜபில் தொழிற்சாலை மணப்பாறை சிப்காட் தொழில் பேட்டையில் அமைய உள்ளது என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

ரூபாய் இரண்டாயிரம் கோடிக்கும் அதிகமான மதிப்பீட்டில் அமையவுள்ள இத்தொழிற்சாலையின் மூலம் 5,000 மேற்பட்டோர் பணி வாய்ப்பினை பெற உள்ளார்கள். குறிப்பாக பெண்கள் அதிகப்படியான பணி வாய்ப்புகளை பெறுவதற்கான ஒப்பந்தம் முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் கையெழுத்தாகியுள்ளது. இதனை தெரிவித்த அமைச்சர், முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

தொடர்ந்து ஒன்றிய அமைச்சருக்கு பதில்களை வழங்கினார்.

எக்காரணத்தைக் கொண்டும் புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொள்ள மாட்டோம். கல்வியில் அரசியல் செய்யாதீர்கள் என்கிறார் ஒன்றிய கல்வித்துறை அமைச்சர். ஆனால் கல்வியில் அரசியல் செய்வது அவர்கள்தான். தாய் மொழியைத்தான் நாங்கள் ஆதரிக்கிறோம் என்கிறார் ஒன்றிய கல்வி அமைச்சர்.

ஆனால் புதிய கல்விக் கொள்கையில் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை அவர்கள் அறிக்கையின் மூலமே அறியலாம். குறிப்பாக அறிவியல் நூல்களையும் தொழில் சார்ந்த நூல்களையும் பல்வேறு துறை சார்ந்த நூல்களையும் தமிழில் மொழி பெயர்த்து வழங்கும் திட்டத்தையும் நாம் செயல்படுத்தி வருகின்றோம்.

அண்ணாவின் இருமொழிக் கொள்கை!

இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் வழியாக நமது மொழி உரிமையை பாதுகாத்து வருகின்றோம். அண்ணா அவர்களின் இரு மொழிக் கொள்கைதான் நாம் பின்பற்றி வருகின்றோம்.

இதுபோன்ற வரலாறுகள் நமக்கு இருக்கும் நிலையில் ஒன்றிய அமைச்சர் தாய்மொழி குறித்து பேச வேண்டிய அவசியம் இல்லை. நிதியை நிறுத்துவதன் வழியாக 15000 மேற்பட்ட ஆசிரிய பெருமக்களுக்கு ஊதியம் வழங்குவதில் சிக்கலை ஏற்படுத்துகின்றது ஒன்றிய அரசு.

புதிய கல்வி கொள்கைகளை ஏற்றுக் கொண்டால் தான் நிதி தர முடியும் என்று என்னிடம் நேரடியாகவே தெரிவித்தார் ஒன்றிய கல்வி அமைச்சர்.

சிக்கலை ஏற்படுத்தும் ஒன்றிய அரசு!

எக்காரணத்தைக் கொண்டும் புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொள்ளும் நிலையில் தமிழ்நாடு அரசு இல்லை. கொள்கையை விட்டுக் கொடுத்து நிதியை பெற வேண்டிய தேவையும் தமிழ்நாடு அரசுக்கு இல்லை.

இதுபோன்ற சிக்கல்களை ஒன்றிய அரசு ஏற்படுத்தினாலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு இதை எல்லாம் முறியடித்து தொடர்ந்து கல்வியில் சாதனை புரியும். கல்வியில் என்றும் நாங்கள் அரசியல் செய்ய விரும்புவதில்லை.

கொடைக்கானலில் சுற்றியுள்ள பள்ளிகள் குறித்து கேள்வி எழுப்பிய செய்தியாளர்களிடம், இம்மாவட்ட பள்ளி கல்வித்துறை முதன்மை அலுவலரிடம் ஆலோசனை மேற்கொண்டுள்ளோம்.

இப்பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று விரைவில் புதிய மேல்நிலைப் பள்ளியும், மலைப்பகுதிகளில் வசிக்கும் மாணவர்களுக்கான போக்குவரத்து வசதியையும் ஏற்படுத்திக் கொடுக்க உடனடி நடவடிக்கையை மேற்கொள்வோம் என்றும் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பதிலளித்தார்.

அண்ணா கிராமம் ஒன்றிய கழகம், தொரப்பாடி பேரூர், மேல்பட்டாம்பாக்கம் பேரூர், கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய அவைத்தலைவர் பி.எம்.சங்கர் தலைமையில் நடைபெற்றது. தலைமைச் செயற்குழு உறுப்பினர், அண்ணா கிராமம் ஒன்றிய கழக செயலாளர் வி.கே.வெங்கட்ராமன் வரவேற்புரையாற்றினார் . அமைச்சர் சி.வெ. கணேசன் சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் மாவட்ட,ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழக பொது உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கைக் கடற்படை மற்றும் கடற்கொள்ளையர்களால் பாதிக்கப்படும்

தமிழக மீனவர்களைப் பாதுகாக்க ஒன்றிய அரசு நிரந்தர தீர்வுகாண வேண்டும்!

‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, செப்.11-

இலங்கைக் கடற்படையாலும் கடற்கொள்ளையர்களாலும் பாதிக்கப்படும் தமிழக மீனவர்களைப் பாது காக்க ஒன்றிய அரசு இலங்கை அரசுடன் பேசி நிரந்தர தீர்வுகாண வேண்டும் என்று ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து 10.09.2024 தேதிய ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-

தமிழ்நாட்டில் 1,076 கிலோ மீட்டர் தூரத்துக்கு நீண்ட கடற்கரை இருக்கிறது. இந்த கடலோரத்தில் 14 மாவட்டங்கள் இருக்கின்றன. அதில் 608 மீனவ கிராமங்கள் உள்ளன. இங்கு வாழும் 10 லட்சத்து 48 ஆயிரம் மீனவர்களின் வாழ்வாதாரம் கடல் தான். அவர்களுக்கு கடலில் உள்ள மீன்களை பிடிப்பதைத்தவிர வேறு தொழில் தெரியாது. “தரை மேல் பிறக்க வைத்தான், எங்களை தண்ணீரில் பிழைக்க வைத்தான், கரை மேல் இருக்க வைத்தான், பெண்களை கண்ணீரில் குளிக்க வைத்தான்”என்று ‘படகோட்டி’ படத்தில் எம்.ஜி.ஆர். பாடிய பாடல்தான் அவர்களின் வாழ்வியல் தத்துவம்.

2009ம் ஆண்டுவரை கடலில் எந்த தொல்லையும் இல்லாமல் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள், அதற்கு பிறகு அச்சத்துடனேயே மீன்பிடிக்க

தலையங்கம்

தினத்தந்தி

10.9.2024 (செவ்வாய்க்கிழமை)

ஒரு பக்கம் இலங்கை கடற்படை; மற்றொரு பக்கம் கொள்ளையர்கள்!

வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இப்போதெல்லாம் கடலில் மீன்பிடிக்கும் மீனவர்கள் இயற்கை சீற்றங்களைக் கண்டு அஞ்சுவதற்கு பதிலாக, “எங்கே இலங்கை கடற்படை நம்மை பிடித்துக்கொண்டுபோய் விடுவார்களோ?” என்ற அச்சத்திலேயே ஒவ்வொரு நிமிடத்தையும் கழிக்க வேண்டியநிலை இருக்கிறது. கைது செய்வது மட்டுமல்லாமல், மீன்பிடி வலைகளோடு படகுகளையும் பறிமுதல் செய்து, மீனவர்களை இலங்கை சிறையில் அடைத்துவிடுகிறார்கள்.

தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டவுடன் கரையில் இருக்கும் மீனவர்கள் மத்தியில் கொந்தளிப்பு ஏற்படுகிறது. அவர்களின் குடும்பங்களும் நிர்க்கதியாக இருக்கின்றன. ஒவ்வொரு முறையும் மீனவர்கள் கைது செய்யப்படும் போதெல்லாம் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பிரதமர் நரேந்திரமோடிக்கும், வெளியுறவுத் துறை மந்திரி ஜெய்சங்கருக்கும் கடிதம் எழுதி, மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க கோருகிறார். ஒன்றிய அரசாங்கமும் தன் ராஜ்ஜிய உறவுகளை பயன்படுத்தி, மீனவர்களை விடுதலை செய்ய வைக்கிறது. ஆனால், படகுகளை மட்டும் இலங்கை அரசாங்கம் கொடுக்க மறுக்கிறது. தற்சமயம் இலங்கை சிறையில் 134 மீனவர்கள் அடைக்கப்பட்டுள்ளனர். 187 படகுகளும் சிறைபிடிக்க ப்பட்டுள்ளன.

கடைசியாக கடந்த 7ந்தேதி புதுக்கோட்டை மாவட்டம், ஜெகதாபட்டினத்தை சேர்ந்த 14 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். தமிழக மீனவர்களின் கைது படலம் அதிகரிப்பதற்கு இலங்கை தேர்தல் காரணமாக சொல்லப்படுகிறது. விரைவில் அங்கு தேர்தல் நடைபெற இருக்கும் சூழ்நிலையில், வடகிழக்கு மாகாணத்திலுள்ள இலங்கை மீனவர்களின் ஓட்டுகளை குறிவைத்து தமிழக மீனவர்களை இலங்கை அரசு வேட்டையாடி வருகிறது என்ற பேச்சு மீனவர்கள் மத்தியில் இருக்கிறது. இப்போது புது தலைவலியாக இலங்கை கடற்கொள்ளையர்களும் கடலில் மீன்பிடிக்க செல்லும் தமிழக மீனவர்களை தாக்கி, மீன்கள், வலைகளை எடுத்துச்செல்வதுடன், படகின் என்ஜின், ஜி.பி.எஸ். கருவி, செல்போன், வாக்கிடாக்கி என்று ஒன்றையும் விடாமல் எடுத்துச்சென்று விடுகிறார்கள். கடந்த மாதம் 26ந்தேதி நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணி அருகேயுள்ள செருதூர் கிராமத்தை சேர்ந்த 3 மீனவர்கள் கடலில் மீன் பிடித்துக் கொண்டு இருந்தபோது, 3 படகுகளில் வந்த 9 கடற்கொள்ளையர்கள் அவர்களை தாக்கி பொருட்களை கொள்ளையடித்துக் கொண்டு போய்விட்டார்கள். அதற்கு பிறகும் ஓரிரு சம்பவங்கள் அப்படி நடந்துள்ளன. ஆக, இப்போது கடலில் மீன்பிடிக்க செல்லும் தமிழக மீனவர்கள், கடலுக்குள் எங்கே மீன் இருக்கிறது என்பதைக் கூட பார்க்காமல், எங்கே இலங்கை கடற்படை வந்துவிடுமோ?, கடற்கொள்ளையர்கள் வந்து தாக்குவார்களோ? என்ற அச்சத்துடனேயே பொழுதை கழிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. எனவே, ஒன்றிய அரசாங்கம் உடனடியாக இலங்கை அரசாங்கத்துடன் பேசி இதற்கு ஒரு நிரந்தர தீர்வுகாண வேண்டும் என்பதே மீனவர்களின் கோரிக்கையாக இருக்கிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.